**மேல் மாகாண வீதி அபிவிருத்திச் செயற்திட்டம் - 2022**

-----------------------------------------------------------------------------------------------------------

ஒபெக் நிதியளிக்கப்பட்ட மேல் மாகாண வீதி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராக உள்ளது. இலங்கையின் மேல் மாகாணத்திலுள்ள முன் தெரிவுசெய்யப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகளின் 27 கிலோமீற்றர்களினை தரமுயர்த்துதல், முன்னேற்றுதல் மற்றும் விரிவுபடுத்துதல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 3,232.5 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 24.87 மில்லியனானதுடன் அதில் ரூபா 2,209.84 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 17 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2017 ஒக்தோபர் 05 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 யூன் 28 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் பூர்த்தி செய்தல் திகதி 2023 செப்தம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா. மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 5 இன் 43(அ) பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு நிதி நிலைமைக் கூற்றிற்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நிதி நிலைமைக் கூற்றுத் திகதியில் இறுதி அந்நிய செலாவணி விகிதத்தில் மாற்றப்பட வேண்டும். எனினும், செயற்திட்டத்தின் வெளிநாட்டுக் கடனுடன் தொடர்புடைய ரூபா 2,268 மில்லியன் தொகையான சமநிலைச் சீராக்கங்கள் மீளாய்வாண்டிற்காக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2,268 | செயற்திட்ட பணவளிப்புக்கள் ரூபாவில் மேற்கொள்ளப்படுகின்றன, எனவே வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதில்லை. எனவே, நாங்கள் ரூபா 2,576.53 மில்லியனை கடன் பணவளிப்புக்களாக நிதிக்கூற்றுக்களில் காட்டியுள்ளோம். நாங்கள் பணவளிப்பு விரிவான அறிக்கையில் வெளிநாட்டுக் கடன் மீதியாக ரூபா 4,844.95 மில்லியனை இனங்கண்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தை பின்பற்றுதல். |
| (ஆ) | பொதி - I தொடர்பான இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ் இல. 47 இன் பிரகாரம் சிவில் பணிகள் தொடர்பான ரூபா 170 மில்லியன் நிதியேற்பாடு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் நடைமுறை வேலை அத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 170 | இணங்கப்பட்டது. கடுவெல - அதுருகிரிய வீதிக்காக 2022 திசெம்பரிற்கான குறித்த இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழானது நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்ட பின்னர் PMU இற்கு பெறப்பட்டது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தை பின்பற்றுதல். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 04 இன் 18 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்துக்களை கையகப்படுத்துதல், நிர்மாணித்தல் அல்லது உற்பத்தி செய்தல் ஆகியவற்றுக்கு நேரடியாகக் காரணமான கடன் பெறும் கிரயம், அந்த சொத்துக்களின் கிரயத்தின் ஒரு பகுதியாக மூலதனமாக்கப்பட வேண்டும். எனினும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான NSB கடனுடன் தொடர்புடைய கடன் பெறும் கிரயத்தை இந்த செயற்திட்டம் மூலதனமாக்கியிருக்கவில்லை. | 119.38 | செயற்திட்டமானது NSB இடமிருந்து கடனை பெற்றிருக்கவில்லை, ஆனால் ரூபா 119.38 மில்லியன் தற்காலிக நிதியுதவியானது வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து அவசரமாக காணி கையகப்படுத்தல் கொடுப்பனவுகளுக்காக பெறப்பட்டது. மேலும் அந்த தொகை செயற்திட்ட நிதிக்கூற்றுக்களில் மூலதனத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தை பின்பற்றுதல். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | OPEC பதிவேடுகளின் தகவல்களின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டிற்கான கடனிலிருந்து செயற்திட்டத்தினால் ரூபா 508.21 மில்லியன் தொகை வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. எனினும், ரூபா 474.43 மில்லியன் மாத்திரமே கணக்கீடு செய்யப்பட்டு ரூபா 33.78 மில்லியன் தொகையான மீதி பெறவேண்டிய வெளிநாட்டு உதவியாக நிதிக்கூற்றில் காட்டப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கடனிலிருந்து வழங்கப்பட்ட தொகை செயற்திட்டத்தால் சரியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் தவறாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | 508.21 | இணங்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டிற்கான மொத்த பணவளிப்பு ரூபா 508.21 மில்லியனாகும். செயற்திட்டத்தின் ஆரம்பக் கட்டத்திலிருந்து, கடனிலிருந்தான பணவளிப்புக்கள் அரச கணக்குகள் திணைக்களத்தின் அறிக்கையின் அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுகின்றன. எனவே, செயற்திட்டம் நிதிக்கூற்றுக்களில் ரூபா 474.43 மில்லியனை காட்டியிருந்தது. ரூபா 33.78 மில்லியன் மிகுதித் தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் நாங்கள் நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டிய வெளிநாட்டு உதவியாக காட்டியுள்ளோம். | ERD அறிக்கைகள் மற்றும் அரச கணக்குகள் ஆகியவற்றை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.2 தீர்க்கப்படாத மீதிகள்**

| இல. | விபரம் | தொகை ரூபா. மில்லியன் | தீர்க்கப்படாத காலப்பகுதி | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடந்த ஐந்து ஆண்டுகளிற்கு மேல் ரூபா 17.62 மில்லியன் கூட்டுமொத்தமாக விளம்பரம், அளவை பணி, மண்சரிவு ஆய்வு, நடைபாதை வடிவமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் ஆலோசனைச் செலவினங்கள் ஆகிய ஏனைய செயற்திட்டங்களிலிருந்து பெறவேண்டிய மூன்று மீதிகளை அறவிடுவதற்கு செயற்திட்டம் எந்த நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை. | 17.62 | 5 ஆண்டுகளுக்கு மேற்பட்டது. | போதுமான கட்டுநிதி கிடைக்கும் போது குறிப்பிடப்பட்ட செயற்திட்டங்களில் இருந்து பெறவேண்டியவைகள் தீர்ப்பனவு செய்யப்படும். | மேலதிக தாமதமின்றி பெறவேண்டியவைகளை அறவிடுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்ட ரூபா 119 மில்லியன் தொகையான | 119 | 5 ஆண்டுகளுக்கு மேற்பட்டது. | இது செயற்திட்டத்திற்கு வீதி அபிவிருத்தி | நிதி உதவி தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | நீண்டகால கடன் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் உரிமை மூலதனமாக காட்டப்பட்டிருந்த போதிலும் கடன் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அந்த கடனுக்கான முறையான அங்கீகாரத்தை RDA பெற்றிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்ட கடன் அல்லாததுடன் அவசர காணி கையகப்படுத்தல் கொடுப்பனவுகளைத் தீர்ப்பதற்கான நிதி உதவி மாத்திரமே ஆகும். | கணக்காய்விற்கு வழங்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டக் கடன் உடன்படிக்கை 2015 யூன் 26 இல் ஐ.அ.டொலர் 17 மில்லியனிற்கு கைச்சாத்திடப்பட்டதுடன் 2019 யூன் 30 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது. எனினும், செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளில் தாமதம் காரணமாக, கடன் இறுதி திகதி 2023 செப்தெம்பர் 30 வரை நிதியளிப்பு முகவரால் பலமுறை நீடிக்கப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டில் கடன் மீள்கொடுப்பனவு தொடங்கப்பட்டிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த கடன் வசதிகளில் 21 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஐ.அ.டொலர் 3.66 மில்லியனை இந்த செயற்திட்டத்தால் வழங்க முடியவில்லை. | இணங்கப்பட்டது.<br>எனினும், காணி சுவீகரிப்பில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் தாமதமாகின. 2023.06.30 இல் உள்ளவாறு ஐ.அ.டொலர் 14.4 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது, இது கடன் தொகையில் 84.70% ஆகும். | கடன் நிதி வினைத்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | கடுவெல முதல் அதுருகிரிய வரையிலான வீதி பொதி - 1 புனரமைப்புப் பணிகளுக்கான ஒப்பந்ததம் ரூபா 1,065 மில்லியன் கிரயத்தில் 2018 சனவரி 29 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2019 யூலை 28 ஆம் திகதி பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. எனினும், ஒப்பந்த காலம் 1,315 நாட்கள் கால நீட்டிப்பை வழங்குவதன் மூலம் 2023 மார்ச் 04 வரை செயற்திட்டத்தால் நீடிக்கப்பட்டது. ஒப்பந்ததாரரின் செயலாற்றல் மிகவும் மோசமாக இருந்த போதிலும் ஒப்பந்தத்தின் நிபந்தனையின் | ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றல் காரணமாக செயற்திட்டம் தாமதமானது. ஆரம்ப கட்டத்தில் காணி சுவீகரிப்பு இழப்பீடு வழங்கப்படாததால் தாமதமானதுடன் நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக செயற்திட்டமானது பிற்பகுதியில் தாமதமானது, இதற்கு பொருண்மையாக விசேடமாக எரிபொருள் பற்றாக்குறை வழிவகுக்கிறது. | மேலதிக கிரயமின்றி பணிகளை பட்டியலிட்ட காலத்தில் பூர்த்தி செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் ஒப்பந்ததாரரிடமிருந்து தாமத சேதங்களை கழிப்பதற்கு செயற்திட்டத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒப்பந்ததாரர் கால நீட்டிப்புக்கான கிரயம் தொடர்பாக ரூபா 65 மில்லியனை கோரியிருந்ததுடன் ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றலைக் கருத்தில் கொள்ளாமல் செயற்திட்டமானது அந்தக் கோரிக்கையை அங்கீகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | எனவே, ஒப்பந்ததாரருக்கு EOT மற்றும் தொடர்புடைய கோரிக்கைகளுக்கு உரித்து உள்ளது. | |
| (இ) | கடுவெல - அதுருகிரிய வீதியின் ரூபா 1,065 மில்லியன் பெறுமதியான அசல் ஒப்பந்தப் பெறுமதி நீடித்த செயற்திட்ட காலம் மற்றும் அளவு வேறுபாடு காரணமாக 42 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 1,518 மில்லியன் வரை ரூபா 453 மில்லியனால் அதிகரிக்கப்பட்டிருந்தது. எனினும், 2006 இன் அரசாங்க பெறுகை வழிகாட்டல்களின் 8.13.4 ஆம் பிரிவின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகைக் குழுவின் தேவையான அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றல் செயற்திட்டக் கிரய அதிகரிப்பை மோசமாகப் பாதித்தமை அவதானிக்கப்பட்டது. | B.O.Q. தொகை பின்வரும் காரணங்களால் அதிகரித்துள்ளது.<br>1. செயற்திட்ட கால நீட்டிப்பு.<br>2. B.O.Q ஐ தயாரிக்கும் போது தற்போதுள்ள பெரும்பாலான கால்வாயை அகலப்படுத்த முன்மொழியப்பட்டது. ஆனால் பொறியியலாளர் பெரும்பாலான கால்வாயின் மோசமான நிலை காரணமாக புனரமைப்பதற்கு பரிந்துரைத்துள்ளார்.<br>3. பொதுமக்களின் வேண்டுகோளின் காரணமாக முதலில் அடையாளம் காணப்பட்ட வடிகால் நீளம் வெகுவாக அதிகரிக்கப்பட்டதுடன் பெரும்பாலான வணிக இடங்களுக்கு மேவுகை அடுக்குகள் வழங்கப்பட்டன. | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து அங்கீகாரங்களை பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (ஈ) | செயற்திட்டத்தின் ஆலோசனை உடன்படிக்கை ரூபா 148 மில்லியனுக்கு 2018 மார்ச் 08 இல் தொடங்கப்பட்டதுடன் அசல் பூர்த்தி செய்தல் திகதி 2019 யூலை 28 ஆகும். எனினும், செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் தாமதமானதால், ஆலோசனைக் கட்டணம் ரூபா 291 மில்லியன் வரை திருத்தப்பட்டிருந்ததுடன் பூர்த்தி செய்தல் திகதி 2023 சனவரி 31 வரை பலமுறை | சிவில் வேலை ஒப்பந்தங்களின் நிர்மாண காலப்பகுதி நீடிப்பு காரணமாக ஆலோசனை உடன்படிக்கை அவ்வப்போது திருத்தப்பட்டது. ஆலோசனைக் காலப்பகுதியின் நீடிப்பின் போது பெறுகைக் குழுவின் அங்கீகாரங்கள் பெறப்பட்டன. | சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நீட்டிக்கப்பட்டிருந்தது. எனினும் முறையான அங்கீகாரங்களை பெற்றுக்கொள்ளாமல் ரூபா 144 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (உ) | ஒப்பந்தப் பொதிகளின் பொறியியலாளர் மதிப்பீடுகள் சரியான முறையில் தயாரிக்கப்படாததன் காரணமாக அசல் செயற்திட்டக் கிரய மதிப்பீடு ரூபா 3,233 மில்லியனாக இருந்ததுடன் பின்னர் ரூபா 4,590 மில்லியன் வரை 42 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 1,358 மில்லியனால் அதிகரித்திருந்தது. மேலும் இது செயற்திட்டக் கிரயம் அதிகரிப்பதை மோசமாக பாதித்தமை அவதானிக்கப்பட்டது. | இணங்கப்பட்டது. செயற்திட்ட கிரய மதிப்பீடு வெளிநாட்டு மற்றும் உள்ளூர் ஒதுக்கீடு போன்ற இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. ரூபா பெறுமதி சரிவால் வெளிநாட்டு ஒதுக்கீடு அதிகரித்ததுடன், காணி சுவீகரிப்பு கிரயம் மற்றும் காணி சுவீகரிப்பு கொடுப்பனவு தாமதத்திற்கான வட்டிக் கொடுப்பனவு காரணமாக உள்ளூர் ஒதுக்கீடு அதிகரித்தது. | சரியான முறையில் கிரய மதிப்பீட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | ஒப்பந்ததாரர் பொறியியலாளர் அலுவலகத்திற்குத் தேவையான அனைத்து உபகரணங்களையும் அவரது செலவில் வழங்க வேண்டியதுடன் பொறியியலாளர் அலுவலகத்திற்கான உபகரணங்கள் ஒப்பந்தத்தின் விபரக்குறிப்புக்களின் 122 ஆம் உட்பிரிவின் பிரகாரம் செயற்திட்டத்தின் பூர்த்தியின் போது ஒப்பந்ததாரரிற்கு மாற்றப்பட வேண்டிய போதிலும் ரூபா 10.35 மில்லியன் தொகை 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அலுவலக உபகரணங்களுக்கான மொத்தத் தொகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்தத்தின் விபரக்குறிப்புக்களின் 126 ஆம் உட்பிரிவின் பிரகாரம் ஒப்பந்தத்தின் முடிவில் பொறியியலாளருக்கான வாகனங்கள் ஒப்பந்ததாரரிற்கு திரும்பப்பெறப்பட வேண்டும். அதேநேரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வாகனங்களுக்காக ரூபா 26.11 மில்லியன் தொகை மொத்த தொகையாக செலுத்தப்பட்டுள்ளது. எனவே, அசாதாரண ஒப்பந்த நிபந்தனைகள் ஒப்பந்ததாரருக்கு தேவையற்ற நன்மைகளை ஏற்படுத்தக்கூடும் என்பதை இது குறிப்பிடலாம். | போட்டி அடிப்படையில் கேள்விகள் கோரப்படுகின்றதுடன் கேள்விதாரர்கள் அதற்கேற்ப தங்கள் கேள்விகளைச் சமர்ப்பித்தனர். பொருட்களின் பெறுமானத்தேய்வுப் பெறுமதி அவற்றின் கேள்விகளில் பரிசீலிக்கப்படுகின்றது என கருதலாம், ஏனெனில் செயற்திட்டம் பூர்த்தியடைந்ததும் பொருட்கள் ஒப்பந்ததாரரிற்கு மீள வழங்கப்படும். | ஒப்பந்ததாரர்களுக்கான தேவையற்ற நலன்களை குறைப்பதற்கு உறுதியான ஒப்பந்த நிபந்தனைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |
| (எ) | ஒப்பந்ததாரர் OFID-3/1 பொதியுடன் தொடர்புடைய ரூபா 408 மில்லியன் தொகையான இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ் இல. 34 | இணங்கப்பட்டது. வற் கொடுப்பனவை தீர்ப்பதற்குப் போதிய கட்டுநிதி பெறப்படவில்லை. | ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் ஒப்பந்ததாரர் பொறுப்பை |

| | | |
|---|---|---|
| முதல் 40 வரை சமர்ப்பித்திருந்த போதிலும், செயற்திட்டமானது காலதாமதத்துடன் கொடுப்பனவுகளை தீர்ப்பனவு செய்தது. இதன் விளைவாக, செயற்திட்டத்திற்கு மேலதிகமாக ரூபா 12 மில்லியன் வற் செலுத்தப்பட வேண்டியிருந்தது. ஒப்பந்ததாரர் கொடுப்பனவுகளை தீர்ப்பனவு செய்வதில் ஏற்பட்ட தாமதம் செயற்திட்டக் கிரயத்தை அதிகப்படுத்தியது. | மேலும் தொடர்புடைய வற் கொடுப்பனவு இந்த ஆண்டில் (2023) மேற்கொள்ளப்பட்டது, கொடுப்பனவு திகதிக்கு தற்போதைய விகிதம் பயன்படுத்தப்படுகிறது. | தாமதமின்றி தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 காணி சுவீகரிப்பு தொடர்பான சிக்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் அரசாங்கத்திற்குச் சொந்தமான 548 காணித்துண்டுகள் உட்பட 2,747 காணித்துண்டுகளை சுவீகரிப்பதற்கு பட்டியலிடப்பட்டிருந்ததுடன், காணி சுவீகரிப்பு சட்டத்தின் 17 வது பிரிவின் கீழ் ரூபா 1,470 மில்லியன் தொகையான இழப்பீடு செலுத்தப்பட்டுள்ளது. மேலும், 2022 திசெம்பர் 31 வரை இழப்பீடு வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்திற்கு வட்டியாக ரூபா 420 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளது. எனினும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பு சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் 337 காணித்துண்டுகள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ளன. | காணி சுவீகரிப்பு சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் சுவீகரிக்கப்பட்ட காணிகளின் பதிவு சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்களால் (DSS) மேற்கொள்ளப்படுகிறது. DS அலுவலகத்தில் பதிவு செய்வதில் தாமதம் உள்ளதுடன் அதை பூர்த்தி செய்வதற்கு பல நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டுள்ளன. | இழப்பீட்டு கொடுப்பனவை விரைவாக வழங்குவதற்கும், காணிகளின் உரிமைத்துவத்தை RDA இற்கு மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 விளைவற்ற/ பயன்படுத்தப்படாத/ குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| வெளிநாட்டுக் கடன் மற்றும் GOSL செலவினங்களின் பயன்பாட்டிற்காக 2022 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரியால் முறையே ரூபா 550 மில்லியன் மற்றும் ரூபா 250 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டிருந்தன. எனினும், செயற்திட்டப் பணிகளின் மெதுவான முன்னேற்றம் காரணமாக 14 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 75.3 மில்லியன் தொகையான வெளிநாட்டு கடன் ஒதுக்கீடும் 72 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 180 மில்லியன் தொகையான GOSL ஒதுக்கீடும் செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ரூபா 75.56 மில்லியன் பெறவேண்டிய வெளிநாட்டு உதவியாக காட்டப்பட்டது. GOSL கூறின் கீழ் போதுமான கட்டுநிதிகள் பெறப்படவில்லை. எனவே, GOSL ஒதுக்கீட்டில் 28 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டது. | கடன் நிதியை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |